J/KONDAVIL RAMA KRISHNA MAHA VIDYALAYAM

PRIZEDAY - 2012 - 2014

Principal's Report
2012 - 2014

05.11.2014

யா/கோண்டாவில்
இராமகிருஸ்ண மகாவித்தியாலயம்

மகுட வாசகம்

கல்வி அழகே அழகு

தூரநோக்கு

மாற்றமுறும் உலகின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய தொழினுட்ப அறிவை வளர்த்தல், ஆங்கில அறிவை மேம்படுத்தல், வேலைகளுக்கான திறன்களை மேம்படுத்தல், ஒழுக்கப்பண்புகளுடன் வாழ்தல் ஆகியவற்றிற்கான தரமான கல்வியை வழங்குவோம்.

பணிக்கூற்று

மாணவர்களிடையே கணித, விஞ்ஞான, ஆங்கிலப் பாடங்களைக் கற்பதில் ஆர்வத்தை ஏற்படுத்துவதோடு தகவல் தொழில்நுட்ப அறிவைப்புகுத்துதலோடு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஊக்குவித்து மாணவரின் ஆளுமையை வளர்த்து புதிய உலகிற்கு பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர்களை உருவாக்கல்

யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்

பரிசில் தினம் 2012 - 2014

காலம்: **05.11.2014 புதன்கிழமை**

நேரம்: **மு.ப 9.00 மணி**

இடம்: **பிரதான மண்டபம்**

தலைவர்

"கணிதச்சுடர்" திரு.சண்.வாமதேவன் அவர்கள்

(அதிபர்)

பிரதம விருந்தினர்

உயர்திரு.வி.பொ. பாலசிங்கம் அவர்கள்

(தலைவர், பொதுச்சேவைகள் ஆணைக்குழு கிழக்கு மாகாணம்,

முன்னாள் ஆணையாளர் யாழ் மாநகரசபை)

சிறப்பு விருந்தினர்கள்

வைத்தியகலாநிதி லயன் வை.தியாகராஜா MJF,JP

அவர்கள்

உயர்திரு.அ.அகிதாஸ் அவர்கள்

(கோட்டக்கல்விப்பணிப்பாளர் நல்லூர்)

பரிசில் வழங்கல்

திருமதி அன்னலஷ்மி பாலசிங்கம் அவர்கள்

எங்கள் அதிபர்

"கணிதச்சுடர்" திரு.ச.வாமதேவன்

(SLPS - I)

பிரதி அதிபர்

திரு.இ.சர்வேஸ்வரன்
Sp.Trd
(SLTS - 2-I)

பகுதித் தலைவர்கள்

திருமதி.கௌ.மாணிக்கராஜா
B.A.(Hons) Dip in Edu
SLTS - 1

திருமதி.ஸ்.சிறியத்மதாசன்
Sp.Trd
(SLTS - I)

திருமதி.ரே.சிவசோதி
Sp.Trd
(SLTS - 2-I)

நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை வரவேற்றல்
- கொடியேற்றல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை
- ஆசியுரை
- தலைமையுரையும் அதிபர் அறிக்கையும்
- பேச்சு – தமிழ்
- சிறப்பு விருந்தினர்கள் உரை
- பேச்சு – ஆங்கிலம்
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல்
- நன்றி உரை
- பாடசாலைக் கீதம்

அதிபர் அறிக்கை

எமது வித்தியாலயத்தின் அருகே அமர்ந்து அருள் வழங்கிக் கொண்டிருக்கும் கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகனின் பாதக் கமலங்களைப் பணிந்து வணங்கி,

இன்றைய பரிசில்தின நன்னாளில் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் தலைவர் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய உயர்திரு.வே.பொ.பாலசிங்கம் அவர்களே! எமது மாணவச் செல்வங்களுக்கு பரிசில்களை வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக வருகை தந்திருக்கும் திருவாட்டி அன்னலஷ்மி பாலசிங்கம் அவர்களே! இன்றைய நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களில் ஒருவராக வருகை தந்திருக்கும் சர்வதேச லயன்ஸ் கழக உபமாவட்ட ஆளுநர் டாக்டர் வை.தியாகராஜா (சமாதான நீதவான்) அவர்களே! இன்றைய நிகழ்விலே சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிக்க வந்திருக்கும் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பெருமதிப்புக்குரிய உயர்திரு.அ.அகிலதாஸ் அவர்களே!

இவ்விழா சிறப்புற அமைய ஆசியுரை வழங்க வருகை தந்திருக்கும் வணக்கத்துக்குரிய குருமணிகளே! இன்றைய பரிசில்தின நிகழ்விலே கலந்து கொண்டிருக்கும் யாழ் கல்வித்திணைக்கள அதிகாரிகளே! கல்விப்புலம் சார் பெரியோர்களே! அயற்பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! முன்னாள் அதிபர்களே! ஆசிரியர்களே! பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே! பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே! பெற்றோர்களே! நலன்விரும்பிகளே! எமது வித்தியாலயத்தின் பிரதி அதிபர் அவர்களே! பகுதித் தலைவர்களே! ஆசிரியர்களே! எனது அன்புக்குரிய மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்ளதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

இன்றைய பரிசில்தின விழாவில் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பெருமதிப்புக்குரிய கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் உயர்திரு வே.பொ.பாலசிங்கம் அவர்களே! சப்த தீவுகளில் ஒன்றாகத் திகழ்கின்ற அனலைதீவினைச் சொந்த இடமாகக் கொண்ட தாங்கள், ஆரம்ப, இடைநிலைக் கல்வியை அனலைதீவு சதாசிவ ஆங்கிலப் பாடசாலையிலும், உயர்கல்வியை யா/வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் கற்று. கலைத்துறையில் சிறப்பாகச் சித்திபெற்று தங்கள் பட்டப் படிப்பினை கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தீர்கள். 1973 இல் ஓர் கலைமாணிப் பட்டதாரியாக (B.A) திகழ்ந்தீர்கள். தாங்கள் பட்டப்பின் படிப்பினை உள்ளூராட்சி நிர்வாகத்தில் மேற்கொண்டிருந்தீர்கள். பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்த காலப் பகுதியிலேயே 1969ம் ஆண்டில் எழுதுவினைஞர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து ஓர் எழுதுவினைஞராகப் புகையிரதத் திணைக்களத்தில் இணைந்து தங்கள் அரச பணியினை ஆரம்பித்தீர்கள். 1979

இல் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்திபெற்று இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து கொண்டீர்கள். 1989ம் ஆண்டு முதல் 2001ம் ஆண்டு வரை மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் யாழ் மாநகரசபையின் ஆணையாளராகப் பதவிவகித்து யாழ் மாவட்ட மக்களுக்கு பெரும்பணி யாற்றினீர்கள். 2001ம் ஆண்டு பதவியுயர்வு பெற்று வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக கடமையாற்றிய தாங்கள் 2002ம் ஆண்டு முதல் வடக்கு கிழக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக பதவி உயர்த்தப்பட்டீர்கள். தொடர்ந்து வடக்கு கிழக்கு மாகாணம் வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது கிழக்கு மாகாணத்தின் நிர்வாகக் கருமங்களை நிறைவேற்றுகின்ற உயர் அதிகாரியாக, கிழக்கு மாகாணத்தின் பிரதம செயலாளராகத் தாங்கள் நியமிக்கப் பட்டீர்கள்.

செறிந்த மொழியறிவும் நிர்வாக சேவையில் தாங்கள் கொண்டிருந்து நிறைந்த அனுபவமும் ஆற்றலும் ஆளுமையும் ஓய்வுக்குப் பின்னரும் அப்பதவியில் தங்களை நீடிக்கச் செய்தன. 2012ம் ஆண்டு முதல் கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட தாங்கள் இன்றுவரை அப்பதவியூடாக மக்களுக்குச் சேவையாற்றி வருகிறீர்கள். அரச பணிகளுக்கு அப்பால் ஆன்மீக மற்றும் அறப்பணிகளில் இணைந்து கொண்ட தாங்கள் யாழ்ப்பாணம் சுவாமி இராமதாச நிறுவனத்தில் பணிப்பாளராகப் பணியாற்றுகிறீர்கள்.

மேலும் தங்கள் சகோதார் உயர்திரு.வி.பொ.பரமலிங்கம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட கருணாலயம் இல்லத்தை நிர்வகித்து நெறிப்படுத்துவதிலும் பெரும்பங்காற்றி வருகின்றீர்கள். இப்பெரும் பணியிலே தங்களை இணைத்துக் கொண்ட வகையில் ஓர் சிறந்த சகோதரனைப் பெற்றுக்கொண்ட பெருமையை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். தங்கள் சகோதரர் பரமலிங்கம் அவர்கள் சமூகத்திற்காக ஆற்றிவரும் பங்களிப்பு அளப்பரியது. பொருளாதார ரீதியாக நலிவுற்ற பிள்ளைகளையும், தாய், தந்தையரை இழந்த பிள்ளைகளையும் பொறுப்பேற்று அவர்களது எதிர்கால வாழ்வினை சுபீட்சமாக மாற்றியமைக்கும் நோக்கில் சிறுவர் இல்லங்களை திருநெல்வேலி, நீர்வேலி, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் "கருணாலயம்" என்ற பெயரில் நிறுவி பணியாற்றி வருகிறார். அத்துடன் பொருளாதார ரீதியாக நலிவுற்ற மக்களுக்காக முல்லைத்தீவு, இயக்கச்சி, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் வீட்டுத்திட்டங்களை அமைத்துக் கொடுத்துள்ளார். தற்போது தனது சொந்தக் கிராமமான அனலைதீவிலும் இத் திட்டத்தினை முன்னெடுத்து வருகிறார். திரு.பரமலிங்கம் அவர்கள் எமது பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான தளபாடங்களை அன்பளிப்பாக வழங்கியதுடன் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கென மாதாந்தம் ரூபா 7,000 ஐ அன்பளிப்பாக நல்கி வருகிறார். அத்துடன் நலிவுற்ற குடும்பத்தில் இருந்து வருகின்ற மாணவர்களின் கல்விக்கான ஊக்குவிப்பு உதவித் தொகையினையும் வழங்கி வருகின்றார். எமது சமூகத்திலுள்ள கண் பார்வையற்றோர், புற்றுநோயாளர்கள் போன்றவர்களுக்கான உதவிக்

கொடுப்பனவுகளையும் வழங்கி வருகின்றார். இத்தகைய பெருமகன் இன்று இவ்விழாவில் பங்குபற்றாதபோதும் அவரின் சேவையினை நான் இன்றைய நாளில் நன்றியுணர்வுடன் நினைவுகூருகின்றேன்.

திரு.பாலசிங்கம் அவர்களே! தாங்கள் தங்களின் பாரியார் திருமதி.அன்னலஷ்மி பாலசிங்கம் சகிதம் எமது வித்தியாலயத்திற்கு வருகை தந்திருப்பதால் எமது விழா சிறப்புறுவதுடன், எமது பாடசாலை சமூகமும் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது.

இன்றைய விழாவில் சிறப்பு விருந்தனர்களில் ஒருவராக வருகை தந்திருக்கும் சர்வசே லயன்ஸ் கழக உப மாவட்ட ஆளுநர் டாக்டர் வை.தியாகராஜா (ச.நீ) அவர்களே! இருபாலைக் கிராமத்தைச் சொந்த இடமாகக் கொண்ட தாங்கள் ஆரம்பக் கல்வியை தெமட்டகொடை சென்.மத்தியூஸ் கல்லூரியிலும், கொழும்பு வெஸ்லிக் கல்லூரியிலும் கற்று, இடைநிலைக் கல்வியை யாழ் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் கற்று 1964ம் ஆண்டு கொழும்பு மருத்துவபீட அனுமதியைப் பெற்று 1967ல் வைத்தியராக வெளியேறினீர்கள்.

1967ம் ஆண்டு முதல் 1983ம் ஆண்டு வரை வெளிமாவட்டங்களில் வைத்தியராகக் கடமையாற்றிய தாங்கள் 1986ம் ஆண்டு முதல் நல்லூரில் ஓர் வைத்தியசேவை நிறுவனத்தை சொந்தமாக ஆரம்பித்து சேவையாற்றி வருகிறீர்கள். வைத்திய சேவையுடன் சமூக சேவையிலும் இணைந்துகொண்டு தாங்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திலும், சர்வதேச லயன்ஸ் கழகத்திலும் சேவையைத் தொடர்ந்தீர்கள். யாழ் மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் நீண்ட காலம் தலைவராகவும், உபதலைவராகவும் இருந்து மக்களுக்கு மகத்தான சேவையாற்றினீர்கள். 1987ல் கோப்பாய் லயன்ஸ் கழகத்தில் இணைந்துகொண்ட தாங்கள் லயன்ஸ் கழக்ததில் பல்வேறு உயரிய பதவிகளை அலங்கரித்து 2014ல் உப மாவட்ட ஆளுநருக்கான தேர்தலில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று சர்வதேச லயன்ஸ் கழகத்தின் உப மாவட்ட ஆளுநராகத் தெரிவுசெய்யப் பட்டீர்கள். இதற்கு எமது பாடசாலை சமூகத்தின் பாராட்டுக்களையும் வாழ்த்துக் களையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

மேலும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவராகவும், உபதலைவராகவும் கடந்த இருபது வருடங்களாக சேவையாற்றி வருகிறீர்கள். கல்விப்பணியில் ஈடுபாடு கொண்ட தாங்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை கோப்பாயில் நிறுவுவதற்கு அயராது உழைத்து தொடர்ச்சியாக பதினான்கு ஆண்டுகள் சிரேஸ்ட ஆலோசகராக கல்லூரியை வழிநடத்திக் கொண்டிருக்கிறீர்கள். தங்களின் சேவையைக் கௌரவித்து "கருமத்திருதி" என்னும் கௌரவப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டீர்கள்.

வைத்தியசேவை, சமூகசேவை மற்றும் கல்விச்சேவை என்பவற்றில் ஈடுபாடுகொண்ட தாங்கள் இன்றைய நிகழ்வில் கலந்து சிறப்பிப்பது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

இன்றைய நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் மதிப்புக்குரிய திரு.அ.அகிலதாஸ் அவர்களே! தென்மராட்சிப் பிரதேசத்தின் எழுதுமட்டுவாள் கிராமத்தைச் சொந்த இடமாகக் கொண்ட தாங்கள் ஆரம்பக்கல்வியை யா/ஒட்டுவெளி அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், இடைநிலை மற்றும் உயர்தரக் கல்வியை யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திலும் கற்று உயர்தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று யாழ் பல்கலைக்கழத்தில் தங்கள் பட்டப்படிப்பினை மேற்கொண்டீர்கள். பட்டப்பின்படிப்பு, கல்விமுதுமாணிப் பட்டம் என்பவற்றை யாழ் பல்கலைக் கழத்தில் பெற்றுக்கொண்டீர்கள். 1984ல் ஆசிரிய சேவையில் இணைந்துகொண்ட தாங்கள் இலங்கை அதிபர் சேவைப் பரீட்சையில் சித்திபெற்று யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலத்தில் தங்கள் கடமையைப் பொறுப்பேற்றீர்கள். 1994ம் ஆண்டு முதல் 2012ம் ஆண்டு வரை யா/கோப்பாய் மகா வித்தியாலயம், யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய புகழ்பூத்த கல்லூரிகளில் பணியாற்றினீர்கள்.

2012ம் ஆண்டில் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்ட தாங்கள் பதவியுயர்வு பெற்று தென்மராட்சி கல்வி வலயத்தில் மாணவர் அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டீர்கள். தங்களிடம் காணப்பட்ட துறைசார் அறிவும் நிர்வாகத்திறனும் காரணமாக தீவக கல்வி வலயத்தில் திட்டமிடல் கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டு, 2014ம் ஆண்டு முதல் எமது நல்லூர்க் கோட்டத்தின் பணிப்பாளராக பணியாற்றி வருகின்றீர்கள். கல்விப்புலத்தில் நிறைந்த அனுபவம் கொண்ட தாங்கள் இன்றைய நிகழ்வில் கலந்துகொண்டிருப்தையிட்டு நாம் மனமகிழ்வடைகின்றோம்.

அன்பார்ந்த பெற்றோர்களே!

நீங்கள் உங்களது பிளைகளின் வெற்றிகளுக்கான பரிசில்களை வழங்கும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வந்துள்ளீர்கள். உங்களது பிள்ளைகளின் கற்றல் வெயற்பாடுகளுக்காகவும் அவர்களது நன்னடத்தைகளுக்காகவும் கவனத்தைச் செலுத்த வேண்டிய தேவை முக்கியமானதாகும். இன்றைய சூழ்நிலையில் கல்விக்கு முக்கியத்துவம் அதிகரித்து வருவதனால் உங்களது செல்வங்களின் எதிர்காலத்திற்காக தற்பொழுது உங்களது கவனம் அவர்கள் மீது அதிகமாகக் காணப்படவேண்டும்.

பழைய மாணவர்களே!

கனடா, சுவிஸ், மற்றும் வெளிநாடுகளிலும் இங்குமுள்ள பழைய மாணவர்களாகிய நீங்கள் எமது பாடசாலையின் வளர்ச்சிகாக்க ஆற்றும்

பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்தும் தங்களது ஆதரவுகளும் உதவிகளும் கிடைக்க வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எனது அன்பார்ந்த மாணவச் செல்வங்களே!

உங்களது கற்றல் ஆர்வத்தினால் எமது பாடசாலை தொடர்ந்தும் உயர்ந்த நிலைக்கு வரவேண்டும். நீங்கள் எங்கள் பாடசாலையின் நோக்கத்திற்கிணங்க சமூகத்திற்கு உகந்த நற்பிரஜையாகத் திகழவேண்டும். எதிர்காலத்தில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் வகையில் தொழில்நுட்பத்திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். மற்றவர்களிடம் அன்பாகவும். பண்பாகவும் இருந்து நல்ல பழக்கவழக்கத்துடன் பாடசாலையின் நற்பெயரைப் பாதுகாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

கல்விச் செயற்பாடுகள்

எமது வித்தியாலயத்தில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை மேற் கொள்வதில் எமது ஆசிரியர்கள் தங்களை அர்ப்பணித்துச் சேவையாற்றுகின்றனர். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011, 2012, 2013 இல் 3 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். க.பொ.த (சா.த) பரீட்சையில் எமது வித்தியாலயத்தில் தோற்றிய மாணவர்களில் 75 சதவீதமான மாணவர்கள் க.பொ.த (உ.த) தரத்திற்கு தகுதிபெற்றனர். க.பொ.த (உ.த) இல் 3 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றும், ஒரு மாணவி கல்வியியற் கல்லூரி அனுமதியையும் பெற்றிருக்கின்றார். இவர்களின் சிறப்பான சித்திக்காக பெரும்பங்காற்றிய ஆசிரியர்களை நான் இந்நாளில் பாராட்டுகின்றேன்.

இணை பாடவிதானச் செயற்பாடுகள்

எமது பாடசாலையில் இணைபாடவிதானச் செயற்பாடுகள் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்மொழித்தினம், சமூக விஞ்ஞானப் போட்டி, கணித விஞ்ஞானப் போட்டி, சமய அறிவுப்போட்டி, சித்திரப்போட்டி,: மெய்வல்லுநர் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளில் கோட்ட, வலய, மாவட்ட மட்டப் போட்டிகளில் எமது வித்தியாலய மாணவர்கள் பங்குபற்றி வெற்றியைப் பெற்றுள்ளார்கள். 2011ல் தேசிய இயற்கை விரிவாக்கற் கழகம் நடத்திய சித்திரப் போட்டியில் எமது வித்தியாலய மாணவி செல்வி பபிதா சாந்தகுலநாதன் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்று எமது வித்தியாலயத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார். எமது வித்தியாலய 15 வயதிற்குட்பட்டோர் கரப்பந்தாட்ட அணியானது 2012, 2013ம் ஆண்டுகளில் நல்லூர்க் கோட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றதுடன் 17 வயது அணி 2012ல் முதலாம் இடத்ததைப் பெற்றுக்கொண்டது. கடந்த ஆண்டில் எமது வித்தியாலயத்தில் 16 வயதிற்குட்பட்டோர் உதைபந்தாட்ட அணியானது நல்லூர்க் கோட்டத்தில் 3ம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது.

பாடசாலையின் முன்மாதிரிச் செயற்பாடுகள்

2012ல் கல்வியமைச்சு DFCC வங்கியின் அனுசரணையுடன் நடைமுறைப் படுத்திய 6S செயற்திட்டத்தில் தேசிய மட்டத்தில் 4ம் இடத்தினை எமது பாடசாலை பெற்றுக்கொண்டதுடன், 6S செயற்திட்டத்தை தொடர்ந்து பேணும் பாடசாலைக்கான விருதினை 2013ல் பெற்றுக்கொண்டோம்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையால் நடாத்தப்பட்ட "சுவச தக்ஷணவ" நிகழ்ச்சித் திட்டத்தில் தூய்மையும் பசுமையும் நிறைந்த பாடசாலைச் சூழலைப் பேணுகின்ற பாடசாலைக்கான விருதினை 2013ல் தேசிய மட்டத்தில 2ம் இடத்தைப் பெற்றுக்கொண்டோம்.

கல்வியமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் "Mother ශ්‍රී லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் RUN PROJECT தேசிய மட்டத்தில் விருதினைப் பெற்றுக்கொண்டோம்.

2013ல் GREEN FORUS ASSOCIATION ஆல் நடத்ததப்பட்ட சூழல் நட்புறவுப் பாடசாலைகள் போட்டியிலும் தேசிய மட்டத்தில் விருதினைப் பெற்றுக்கொண்டோம்.

பாடசாலைத் தோட்டப் போட்டியில் எமது பாடசாலை 2012ல் பிரதேச செயலக் மட்டத்தில் 1ம் இடத்தையும், மாவட்ட மட்டத்தில் 2ம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இந்தவகையில் எமது பாடசாலையானது கல்விச் செயற்பாடுகளிலும், இணைபாடவிதானச் செய்பாடுகளிலும், பாடசாலையின் முன்மாதிரிச் செயற்பாடுகளிலும் காலத்துக்குக்காலம் முன்னேற்றம் கண்டு வருகின்றது.

எமது வித்தியாலயத்தில் சேவையாற்றும் ஆளணியினர்

விபரம் - 2014

1.	திரு.ச.வாமதேவன்	– அதிபர்	SLPS I
2.	திரு.இ. சர்வேஸ்வரன்	– பிரதி அதிபர்	SLTS 2-I
3.	திருமதி. ஸ்.ஸ்ரீபத்மதாசன்	– பகுதித்தலைவர் – இடைநிலைப்பிரிவு	SLTS I
4.	திருமதி. கௌ. மாணிக்கராஜா	– பகுதித்தலைவர் – உயர்தரப் பிரிவு	SLTS I
5.	திருமதி. ரே. சிவசோதி	– பகுதித்தலைவர் – ஆரம்பப் பிரிவு	SLTS 2-I
6.	திருமதி. க. சிவநாதன்	– ஆசிரியர்	SLTS 2-I
7.	திரு.அ. ஜெயதாசன்	– ஆசிரியர்	SLTS 2-I
8.	திருமதி. ம. பாலகிருஷ்ணன்	– ஆசிரியர்	SLTS I
9.	திரு. M.L. பாஸ்கரன்	– ஆசிரியர் (இணைப்பு RESC)	SLTS I
10.	திருமதி. ஜெ. வேல்ராஜா	– ஆசிரியர்	SLTS 2-I
11.	திருமதி. ப. பாலச்சந்திரன்	– ஆசிரியர்	SLTS 2-II
12.	திருமதி. கு. ரவீந்திரன்	– ஆசிரியர்	SLTS 2-II
13.	திருமதி. சோ. திருஞானமூர்த்தி	– ஆசிரியர்	SLTS I
14.	திருமதி.க. விஜயகுமார்	– ஆசிரியர்	SLTS I
15.	திருமதி. உ. திருச்சபேசன்	– ஆசிரியர்	SLTS 2I
16.	திருமதி. சி. கிருஷ்ணதாஸ்	– ஆசிரியர்	SLTS I
17.	திருமதி. சி. சண்முகராஜா	– ஆசிரியர்	SLTS I
18.	திருமதி.சி. ஆனந்தஜோதி	– ஆசிரியர்	SLTS 2-I
19.	திருமதி. கு. இராஜேந்திரன்	– ஆசிரியர்	SLTS 2-I
20.	திருமதி. ந. தயாளந்தன்	– ஆசிரியர்	SLTS 2-II
21.	திருமதி. மே. சிவநாதன்	– ஆசிரியர்	SLTS 2-I
22.	திரு.சு. விக்கினேஸ்வரன்	– ஆசிரியர்	SLTS 2-II
23.	திரு. செ. ரவிச்சந்திரன்	– ஆசிரியர்	SLTS 2-II
24.	திருமதி. சு. ரவீந்திரநாதன்	– ஆசிரியர்	SLTS 2-II
25.	திருமதி. வி. மோகலிங்கம்	– ஆசிரியர்	SLTS 2-I
26.	திருமதி. ம.சிவானந்தநாதன்	– ஆசிரியர்	SLTS 2-I
27.	திருமதி. ம. சுரேந்திரன்	– ஆசிரியர்	SLTS 2-II
28.	திரு. நா. செந்தில்நாதன்	– ஆசிரியர்	SLTS 2-II
29.	திருமதி. சு. ஸ்ரீதரன்	– ஆசிரியர்	SLTS 2-II
30.	திருமதி. அ. உதயகுமார்	– ஆசிரியர்	SLTS 2-II
31.	திரு.பா.பாலமுரளி	– ஆசிரியர்	SLTS 2-II
32.	திருமதி. கு. நிரேஸ்குமார்	– ஆசிரியர்	SLTS 2-II
33.	திருமதி. ல. பிரபாகரன்	– ஆசிரியர்	SLTS 2-II
34.	திருமதி. பூ. சத்தியன்	– ஆசிரியர்	SLTS 2-II
35.	திருமதி. சு. சதீஸ்வரன்	– ஆசிரியர்	SLTS 3-I
36.	திருமதி. மை. நிரஞ்சன்	– ஆசிரியர்	SLTS 2-I
37.	திருமதி. நா. சரவணபவன்	– ஆசிரியர்	SLTS 3-II
38.	திரு.ந. மயூரன்	– ஆசிரியர்	SLTS 2-II
39.	திருமதி. பி. அருள்சந்திரன்	– ஆசிரியர்	SLTS 2-II
40.	திருமதி. வே. செல்வசீபன்	– ஆசிரியர்	SLTS 3-II
41.	திருமதி. சு. சிவகுமாரன்	– ஆசிரியர்	SLTS 3-I
42.	திருமதி.தா.சிவசீலன்	– ஆசிரியர்	SLTS 3-I
43.	திருமதி. த. ஜங்கரன்	– ஆசிரியர்	SLTS 3-I
44.	திரு. பா. பிரசாத்	– ஆசிரியர்	SLTS 3-I
45.	திரு.கு.பிரசன்னா	– ஆசிரியர்	SLTS 3-II
46.	திரு.தே. சுகந்தன்	– உள்ளகப் பயிற்சி ஆசிரியர், யா/தேசிய கல்வியியற் கல்லூரி	
47.	திரு. வொ. அகிலன்	– உள்ளகப் பயிற்சி ஆசிரியர், யா/தேசிய கல்வியியற் கல்லூரி	
48.	செல்வி.K.கர்சனா	– உள்ளகப் பயிற்சி ஆசிரியர், யா/உயர் தொழில்நுட்பக் கல்லூரி	
49.	திரு.சு.வரம்பிரசாதம்	– காவலாளி	
50.	திரு. பூ. ஸ்ரீபாலவிக்கினேஸ்வரன்	– காவலாளி	
51.	திருமதி.ந.ஸ்ரனிகரன்	– ஆசிரியை	SLTS 2-II

ஆசிரியர் விபரம்

	2011	2012	2013
எமதுகல்லூரியில் கடமையாற்றிய மொத்த ஆசிரியர்கள்	32	36	44
பட்டதாரி ஆசிரியர்கள்	13	16	20
பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்	18	19	22
தேசியக் கல்லூரி டிப்ளோமா	01	01	02

கல்விசாரா ஊழியர்கள் விபரம்

நிரந்தர கல்விசாரா ஊழியர்கள்	02	02	02

இடமாற்றம் பெற்று புதிதாக இணைந்து கொண்டோர்

2011	2012	2013
திரு.டோ.செல்டன்	திருமதி.ஜெ.ரமேஸ்குமார்	திருமதி.ம.சுரேந்திரன்
திருமதி.தி.சிவகுமாரன்	திருமதி.ந.தயானந்தன்	திருமதி.க.விஜயகுமார்
திருமதி.ப.பாலச்சந்திரன்	திருமதி.வே.செல்வசஜீபன்	திருமதி.ம.பாலகிருஸ்ணன்
திருமதி.சி.கிருஸ்ணதாஸ்	திருமதி.ஆ.ரஞ்சன்	திருமதி.ல.பிரபாகரன்
திருமதி.க.சிவநாதன்	திரு.செ.ரவிச்சந்திரன்	திருமதி.ம.சிவானந்தநாதன்
திருமதி.மே.சிவநாதன்	திருமதி.நா.சரவணபவன்	திருமதி.வி.மணிமாறன்
திருமதி.க.ரஞ்சித்குமார்	திருமதி.சு.தவசேகரம்	திருமதி.பி.சிவசெயன்
திருமதி.ச.தர்மராஜேந்திரன்	திருமதி.பூ.சத்தியன்	திருமதி.த.செந்தூரன்
திருமதி.யா.விவேகானந்தன்	திரு.F.G.S.செல்வச்சந்திரன்	திரு.பா.பாலமுரளி
திருமதி.சர்மிலா	திருமதி.பி.அருட்சந்திரன்	திருமதி.வி.டனிஷ்ரன்
திருமதி.வி.மோனலிங்கம்		திரு.கு.பிரசன்னா

மாற்றலாகிச் சென்ற ஆசிரியர்கள் 2011 - 2013

திருமதி.ச.தர்மராஜேந்திரன்	திருமதி.ஜெ.ரமேஸ்குமார்
திருமதி.பி.ஜெயரட்ணராஜா	திருமதி.சு.தவசேகரன்
செல்வி.மு.ஜெயக்குமாரி	செல்வி.ம.காத்யாயினி
திருமதி.தி.சிவகுமாரன்	திரு.போ.செல்ரன்
திருமதி.க.ரஞ்சித்குமார்	
திருமதி.சர்மிலா	

மாணவர் தொகை விபரம்

	2011	2012	2013
தரம் 1-5	184	218	205
தரம் 6-11	369	328	335
தரம் 12-13	59	76	60
மொத்தம்	612	622	600

பதவி உயர்வு பெற்றுச் சென்றோர்

செல்வி.மு.ஜெயக்குமாரி – கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்

திருமதி.பி.ஜெயரட்ணராஜா – அதிபர் (யா/கோப்பாய் றோ.க பாடசாலை)

திரு.போ.செல்ரன் - தகவல் தொழில்நுட்ப போதனாசிரியர் (யாழ் கல்வி வலயம்)

ஓய்வு பெற்றுச் சென்றோர்

திருமதி.ரே.பாலசுப்பிரமணியம் - உப அதிபர், உயர்தர வகுப்பு புவியியல் பாட ஆசிரியர், புவியியல் மன்றப் பொறுப்பாசிரியர்

திரு.முருகதாசன் - உயர்தர வகுப்புக்கள் தமிழ்ப்பாட ஆசிரியராகவும், தமிழ் மன்றப்பொறுப்பாசிரியராகவும், பல பதவிகளை வகித்து திறம்படச் சேவையாற்றியவர்

இவர்களது அர்ப்பணிப்பான சேவைக்கு எனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவிப்பதுடன் அவர்களது எதிர்காலம் சீரும் சிறப்பும் பெற்று வளமுடன் அமைய எல்லாம் வல்ல விநாயகர் அருளை வேண்டி நிற்கின்றேன்

விருது பெற்றோர்

மேதகு ஜனாதிபதி அவர்களால் வழங்கப்படுகின்ற நல்லாசிரியர்களுக்கான "பிரதீபாபிரபா"விருதினை எமது அதிபரான திரு.சண் வாமதேவன் அவர்கள் 2013ல் பெற்றுக்கொண்டார்

பரீட்சைப் பெறுபேறுகள்

க.பொ.த. சாதாரணம்	2011	2012	2013
தோற்றியோர்	- 33	36	30
சித்தியடைந்தோர்	- 24	27	13
சித்தி வீதம்	- 72%	75%	43%

கூடுதலான விசேட சித்தி பெற்றோர் 6A-1 5A-1 6A-1

கலைப்பிரிவு

க.பொ.த உயர்தரம்	2011	2012	2013
தோற்றியோர்	- 30	9	18
சித்தியடைந்தோர்	- 20	7	13
சித்தி வீதம்	- 67%	78%	72%

வர்த்தகம்

க.பொ.த உயர்தரம் 2013ஓகஸ்ட்,

தோற்றியோர் - 5

சித்தியடைந்தோர் - 4

சித்தி வீதம் 80%

பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்- 3

ஆசிரியர் நலன்புரிக்கழகம்

காப்பாளர் - சண்.வாமதேவன் (அதிபர்)

	2011	2012	2013
தலைவர்	திரு.ந.மயூரன்	திரு.ந.மயூரன்	திரு.ந.மயூரன்
செயலாளர்	திருமதிஜெ.வேல்ராஜா	திருமதிஜெ.வேல்ராஜா	திருமதிஜெ.வேல்ராஜா
பொருளாளர்	திருமதி.சிகுலவீரசிங்கம்	திருமதி.சிகுலவீரசிங்கம்	திருமதி.சிகுலவீரசிங்கம்

ஆசிரியர் கழகமானது ஆசிரியர்களின் நலன்களைப் பேணுவதோடு பாடசாலையில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளில் பங்களிப்புச்செய்வதுடன் கழகச்செயற்பாடுகளாக ஆசிரியர் விலகல், ஓய்வு பெற்றுச் செல்லல் போன்ற சந்தர்ப்பங்களில் அவர்களுக்கான சேவை நயப்பு விழாக்களை ஏற்பாடுசெய்தல், சர்வதேச சிறுவர் தினத்தைக் கொண்டாடுவதன் ஊடாக மாணவர்களை மகிழ்வித்தல், அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களின் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களில் கலந்து சிறப்பித்தும் வருகின்றனர். கழகமானது அதிபர் ஆசிரியர்கள் சம்பளத்தில் மாதாந்தம் சிறுதொகைப் பணமாக தனது நிதியை திரட்டிக்கொள்கிறது.

பாடசாலை ஒழுக்காற்றுக்குழு

வழிகாட்டல் - அதிபர்.

பொறுப்பாசிரியர் - திரு.நா.செந்தில்நாதன்

இணைப்பொறுப்பாசிரியர் - திரு.சு.விக்னேஸ்வரன்

குழு உறுப்பினர்கள் - திரு.இ.சர்வேஸ்வரன்,
திருமதி.கௌ.மாணிக்கராஜா
திருமதி.ஸ்.ஸ்ரீபத்மதாசன்
திருமதி.ரே.சிவசோதி
திருமதி.சோ.திருஞானமூர்த்தி
திருமதி.க.சிவநாதன்
திரு.அ.ஜெயதாசன்
திரு.ந.மயூரன்
திரு.பா.பாலமுரளி
திருமதி.ல.பிரபாகரன்

பாடசாலை ஒழுக்காற்றுக்குழுவானது பாடசாலைக்குரிய ஒழுக்க விழுமியங்களைப்பேணுதல், நடைமுறைப்படுத்தல், மாணவர்களின் ஒழுக்கம் பேணல், மாணவர்களைச் சீர்மியப்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டுவருகின்றது.

மாணவர் முதல்வர் சபை

காப்பாளர் - திரு.சண்.வாமதேவன் (அதிபர்)
பொறுப்பாசிரியர் - திரு.சு.விக்னேஸ்வரன்
இணைப்பொறுப்பாசிரியர் - திரு.நா.செந்தில்நாதன்
உறுப்பினர்கள் - திரு.இ.சர்வேஸ்வரன்
திருமதி.கௌ.மாணிக்கராஜா
திருமதி.சோ.திருஞானமூர்த்தி

மாணவர்களைத் தெரிவுசெய்தல், அவர்களுக்கான சின்னங்களை வழங்கல், கடமைகளைப் பகிர்ந்தளித்தல், வழிகாட்டல் செய்தல், பாடசாலைகளில் இடம்பெறும் நிகழ்வுகளின் மாணவர் தலைவர்களை ஈடுபடுத்தல், அவர்களை மேற்பார்வை செய்தல், போன்ற செயற்பாடுகளை மாணவமுதல்வர் சபை ஆற்றி வருகின்றது.

2011
மாணவர் முதல்வர்களின் தொகை – 27
முதுநிலை மாணவர் தலைவர் - செல்வன்.சி.அனுராங்கன்
முதுநிலை மாணவர் தலைவி – செல்வி.கு.குணமணி

2012
மாணவர் முதல்வர்களின் தொகை – 15
முதுநிலை மாணவர் தலைவர் - செல்வன்.இ.பிறின்சன்
முதுநிலை மாணவர் தலைவி – செல்வி.சி.றக்சாயினி

2013
மாணவர் முதல்வர்களின் தொகை – 17
முதுநிலை மாணவர் தலைவர் - செல்வன்.க.பிரவீனன்
முதுநிலை மாணவர் தலைவி – செல்வி.அ.நிசாந்தினி

பழைய மாணவர் சங்கம்

தலைவர் திரு ஐ.மகாதேவன்
செயலாளர்- திரு.ச.தினேசன்
பொருளாளர்- திரு. செ. செந்துாரன்

பழைய மாணவர் சங்க யாழ்ப்பாணக் கிளையானது ஏனைய நாடுகளில் செயற்படும் எமது பழைய மாணவர் சங்கங்களை, எமது பாடசாலையுடன் இணைக்கும் ஒரு அமைப்பாக விளங்குகிறது

எமது சங்கமானது வருடாந்தம் ஆசிரியர் கௌரவிப்பு தினத்தினை வெகுவிமரிசையாகக் கொண்டாடுவதுடன், பாடசாலையின் விளையாட்டுப்போட்டி பரிசளிப்பு விழா போன்றவற்றிற்கு உபசரணை வழங்குவதோடு அபிவிருத்தியில் பெரும்பங்கு கொள்கிறது.

பழைய மாணவர் சங்க சுவிஸ் கிளை, மற்றும் கனடாக்கிளையுடன் இணைந்து ஊர்மக்களின் பங்களிப்புடன் 4,025,000 ருபா பெறுமதியான இரண்டரைப் பரப்பு காணியை ஆரம்பப் பிரிவுப் பாடசாலைக்குக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளது.

மேலும், பழைய மாணவர் சங்க கனடாக் கிளையானது புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் பிரதான மண்டபத்திற்காக 3,854,160 இலட்சம் ரூபா வரையிலான மேலதிக செலவினைப் பொறுப்பேற்று, மண்டபம் முழுமையாக பூரணப்புடுத்தப்பட்டுள்ளதுடன் எமது சங்கத்தினுடைய செயற்பாடுகள் மேலும் வளர்வதற்கு எல்லாம் வல்ல விநாயகனை வேண்டுகிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

	2011	2012	2013
தலைவர்	திரு.ச.வாமதேவன்	திரு.ச.வாமதேவன்	திரு.ச.வாமதேவன்
செயலாளர்	திரு.S..பாலகிருஸ்ணன்	திருமதிசெ.சுரேஸ்	திருமதி ச. றொசானி
பொருளாளர்	திருமதி ரே.சிவசோதி	திருமதி ரே.சிவசோதி	திருமதி ரே.சிவசோதி

எமது பாடசாலையின் வளர்ச்சியிலும், விருத்தியிலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வகிபாகம் முக்கியமானதொன்றாகும். சுற்றறிக்கையின் பிரகாரம் பெற்றோர், ஆசிரியர்கள், பழையமாணவர் பிரதிநிதிகளைக் கொண்ட பாடசாலை அபிவிருத்திக் குழு தெரிவுசெய்யப்பட்டு பாடசாலையின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கல்வி அபிவிருத்தி, பௌதிக வளங்களின் அபிவிருத்தி என்பவற்றினூடாக பாடசாலை அபிவிருத்தியில்

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தமது பணிகளை முன்னெடுத்திருக்கின்றது. பாடசலைச் செலவினங்களுக்குரிய ஒரு தொகுதி நிதி அதாவது மாணவர்களின் கற்றல் உபகரணங்கள், மேலதிக தமிழ்ப் பாடம் கற்பித்த ஆசிரியருக்கான கொடுப்பனவு, உள்ளகக் கட்டமைப்பு விருத்தி, பராமரிப்பு மற்றும் கல்வி சார் செயற்பாடுகளுக்கு பாடசாலை அபிவிருத்திச்சங்கம் முழுமூச்சுடன் பங்களிப்புச் செய்கின்றது. இச்சங்கத்தின் செயற்பாடுகளுக்குப் பெற்றோர்களும் பழைய மாணவர்களும் தமது ஒத்துழைப்பை நல்கி வருகின்றனர்.

பாடசாலை விளையாட்டு அவை

காப்பாளர் - திரு.ச.வாமதேவன் (அதிபர்)

பொறுப்பாசிரியர்கள் - திரு.அ.ஜெயதாசன் (2011)

திரு.ந.மயூரன் (2012)

திரு.ந.மயூரன் (2013)

உறுப்பினர்கள் :

திரு.கு.முருகதாசன்
திரு.கௌ.மாணிக்கராஜா
திருமதி.கு.இரவீந்திரன்
திருமதி.சோ.திருஞானமூர்த்தி
திருமதி.அ.சதீஸ்வரன்
திருமதி.ஜெ.வேல்ராஜா
திருமதி.ஸ்.ஸ்ரீபத்மதாசன்
திரு.பி.பிரசன்னா
திரு.இ.சர்வேஸ்வரன்
திருமதி.ரே.சிவசோதி
திருமதி.க.சிவநாதன்
திருமதி.ஆ.குகபரன்
திருமதி.மா.சுரேஸ்
திருமதி.சி.குலவீரசிங்கம்
திருமதி.ஆ.ரஞ்சன்

விளைாட்டு அவையானது பாடசாலை விளையாட்டுப் போட்டியை சிறப்பாக உரிய காலத்தில் நடத்துவதுடன், கோட்ட, வலய மட்டப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்தி பங்குபற்றச் செய்கின்றனர். எமது பாடசாலை மாணவர்கள் கோட்ட, வலய மட்டப் போட்டிகளில் வெற்றி பெறுவதுடன், மாகாண மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளனர்.

வழிகாட்டல் ஆலோசனைச் சேவை

பொறுப்பாசிரியர் - க.சிவநாதன்

இச்சேவையானது மாணவர்களதும் ஆசிரியர்களதும் உளவளத்தைப் பேணுவதனூடாக கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் புதிய உத்வேகத்தைத் தோற்றுவிக்கின்றது. அத்துடன் மாணவர்களுக்கு ஏற்படும் மனவருத்தம், மன நெருடல்களை நீக்கி சுயமாகச் சிந்திக்கவும், செயற்படவும் ஏற்ற வழிகாட்டல்களை வழங்கி வருகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 1ம் திகதி தொடக்கமட் 10ம் திகதி வரை உலக உளநல நாள் வாரம் பாடசாலையில் சிறப்பாக அனுட்டிக்கப்படுகிறது. கருத்தரங்குகள், சிறப்புச் சொற்பொழிவுகள், நாடகங்கள் (நல்லதோர் சமுதாயமாக 2012) என்பவற்றுடன் இக் காலகட்டத்தில் காலைப் பிரார்த்தனையைத் தொடர்ந்து நற்சிந்தனைகள் வழங்கப்படுகின்றது. சிறுவர், முதியோா தினம், அரங்காற்றுகைகள் நிகழ்த்தப்பட்டு மாணவர்களின் ஆளுமை விருத்தி, ஆக்கத்திறன் என்பவற்றை வளர்ப்பதந்காக பயிற்சி அளிக்கப்படுகிறது. பிரதேச செயலகத்ததால் நிகழ்த்தப்படும் போட்டிகளில் சிறந்த இடத்தினை எமது பாடசாலை பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

பாடசாலை அபிவிருத்திக்குழு

திரு.ச.வாமதேவன் (அதிபர்)
திரு.நா.செந்தில்நாதன் (ஆசிரியர்)
திரு.கௌ.மாணிக்கராஜா (ஆசிரியர்)
திருமதி.வே..சிவசோதி (ஆசிரியர்)
திருமதி.த.சுபரிஜினி (பெற்றோர் பிரதிநிதி)
திரு.S.சாந்தகுலநாதன்(பெற்றோர் பிரதிநிதி)
திரு.வி.மதிசங்கர் (பழைய மாணவர்)
திரு.இ.சர்வேஸ்வரன் (ஆசிரியர்)
திரு.சு.விக்கினேஸ்வரன் (ஆசிரியர்)
திருமதி.போ.சத்தியன் (ஆசிரியர்)
திருமதி.பி.அருட்சந்திரன் (ஆசிரியர்)
திருமதி.த.நந்தகுமாரி (பெற்றோர் பிரதிநிதி)
திரு.சு.நித்தியானந்தன் (பெற்றோர் பிரதிநிதி)
திரு.சா.பபிசன் (பழைய மாணவர்)

பாடசாலை முகாமைத்துவக்குழு

திரு.ச.வாமதேவன்
திரு.இ.சர்வேஸ்வரன்
திருமதி.கௌ.மாணிக்கராஜா
திருமதி.சோ.திருஞானமூர்த்தி
திருமதி.ஜெ.வேல்ராஜா
திருமதி.ஸ்.ஸ்ரீபத்மதாசன்
திருமதி.ரே.சிவசோதி

உள்ளக மேற்பார்வைக்குழு

திரு.இ.சர்.வேஸ்வரன்
திருமதி.ஸ்.ஸ்ரீபத்மதாசன்
திருமதி.ம.பாலகிருஷ்ணன்
திருமதி.கௌ.மாணிக்கராஜா
திருமதி.ரே.சிவசோதி

பரீட்சைக்குழு

திருமதி.கௌ.மாணிக்கராஜா
திருமதி.மா.சிவானந்தநாதன்
திரு.சு.விக்கினேஸ்வரன்
திருமதி.கு.இரவீந்திரன்
திருமதி.சோ.திருஞானமூர்த்தி
திரு.அ.ஜெயதாசன்
திருமதி.கு.இராஜேந்திரன்

கணிப்பீட்டுக்குழு

திருமதி.கு.நிரேஸ்குமார்
திரு.ந.மயூரன்
திருமதி.கௌ.மாணிக்கராஜா
திருமதி.தா.சிவசீலன்
திரு.இ.சர்வேஸ்வரன்
திருமதி.ஸ்.ஸ்ரீபத்மதாசன்
திருமதி.சி.ஆனந்தஜோதி

மதிப்பீட்டுக்குழு

திரு.இ.சர்வேஸ்வரன் திருமதி.கௌ.மாணிக்கராஜா
திருமதி.சி.ஆனந்தஜோதி திரு.பா.பிரசாந்
திருமதி.வே.செல்வசசீபன்

கொள்வனவுக்குழு

திரு.ச.வாமதேவன் திருமதி.ஸ்.ஸ்ரீபத்மதாசன்
திரு.பா.பாலமுரளி திருமதி.அ.உதயகுமார்

சிறுவர் பாதுகாப்புக்குழு

திரு.ச.வாமதேவன் திரு.இ.சர்வேஸ்வரன்
திருமதி.கா.சிவநாதன் திருமதி.வி.மேகலிங்கம்
திருமதி.கு.இரவீந்திரன் திருமதி.மே.சிவநாதன்

இவர்களுடன் சிரேஸ்ட மாணவர் தலைவர்களும், வகுப்பு மாணவ முதல்வகளும் உள்ளடங்கலாக 22 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

வழிகாட்டல் ஆலோசனைக்குழு

திருமதி.க.சிவநாதன் திரு.நா.செந்தில்நாதன்
திருமதி.சி.சண்முகராஜா திருமதி.பி.அருட்சந்திரன்

மாணவர் வரவுக்குழு

திருமதி.க.விஜயகுமார் திருமதி.க.சிவநாதன்
திருமதி.ஸ்.ஸ்ரீபத்மதாசன்

அனர்த்த முகாமைத்துவக்குழு

திருமதி.க.விஜயகுமார் திரு.ந.மயூரன்
திருமதி.ம.சுரேந்திரன்

முற்பாதுகாப்புக்குழு

திருமதி.உ.அஜிதா திருமதி.சு.ரவீந்திரநாதன்
திருமதி.சு.சிறிதரன்

சூழல் பாதுகாப்புக்குழு

திருமதி.சு.சதீஸ்வரன் திருமதி.கு.இராஜேந்திரன்
திருமதி.சு.சிவகுமாரன்

முதலுதவிக்குழு

திருமதி.வே.செல்வசசீபன் திருமதி.ப.பாலச்சந்திரன்
திருமதி.மை.நிறஞ்சன்

சுகாதாரக்குழு

திருமதி.நா.சரவணபவன் திரு.இ.பிரசன்னா
திருமதி.த.ஐங்கரன்

மதிய உணவுக்குழு

திரு.இ.சர்வேஸ்வரன் திருமதி.சோ.திருஞானமூர்த்தி
திருமதி.அ.உதயகுமார்

மன்றங்களும் கழகங்களும் 2011 2012 2013
காப்பாளர்- திரு. சண். வாமதேவன்

	மன்றம்	பொறுப்பாசிரியர்	தலைவர்	செயலாளர்	பொருளாளர்	செயற்பாடுகள்
2011	இந்து மா மன்றம்	திருமதி. ஸ்ரீபத்மதாசன்	செல்வன். ர.விஜயராஜ்	செல்வி. குணமணி	செல்வி. சபீலா	சமயப் பற்றுக் குன்றி வரும் இக் காலத்தில் அப பற்றை மாணவர்களிடையே வளர்க்கும் நோக்குடன் வெள்ளிக்கிழமை தோறும் பஞ்ச புராணம் ஓது வதுடன் சிவ புராணமும் ஓதப படுகின்றது. இத்துடன் நால்வர் குருபூசைத் தினங்கள் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றதுடன் ஆன்மீகச் சொற் பொழிவுகளும் இடம் பெறுகின்றன. நவராத்திரி விழாவையும் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. விஜயதசமி விழாவில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் வெகுவிமரிசையாக நடைபெற்று வருகிறது. திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மகாசிவராத்திரி அன்னதானத் திருப்பணிக்கு பணம் வழங்கி வருகிறது.
2012		திருமதி. சிவண்முகராஜா	செல்வன். விபுசனன்	செல்வி. சி.நிவேதா	செல்வி. வி. துசாந்தி	
2013		திருமதி. சிவண்முகராஜா	செல்வன். செ.விதுசன்	செல்வன். யோதிசாந்தன்	செல்வி. சி.பானுஜா	
2011	தமிழ் மன்றம்	திருமதி . க.சிவநாதன்	செல்வி. மு.விஜிதா	செல்வன். ர.விஜயராஜ்	செல்வி. செ.சஞ்சிதா	தமிழ்த்தினப் போட்டிக்கான பயிற்சி மேம்படுத்தல்,
2012		திருமதி. க.சிவநாதன்	செல்வி. அ. நிசாந்தினி	செல்வி. இ.வரதா		

2013		திருமதி. மா.சுரேஸ்	செல்வன். இ.சருபன்	செல்வி. நி.கிருஸ்ண தயாளினி	செல்வி. அ.நிசாந்தினி	பாடசாலை மட்டத்திலான முத்தமிழ் விழாச் செயற் பாடுகள் மன்றச் செயற்பாடுகள் மூலம்மாணவர் ஆக்கங்களை ஊக்குவித்தல் தமிழ்ப்பெரியார் களது நினைவு தினச் சொற் பொழிவு நடத்துதல்
2011	கணித விஞ்ஞான மன்றம்	திரு. அ.ஜெயதாசன்	செல்வி. தேலோஜிதா	செல்வி. அ.நிசாந்தினி	செல்வி. தி.தயாளினி	கணித விஞ்ஞான மன்றம் நடத்துதல். கண்காட்சிகள் வானியற் பாசறை நடத்துதல். வினாடிவினாப் போட்டி நடத்துதல். புத்தாக்கப் போட்டிகளில் வலய மட்டத்தில் பங்குபற்றியமை.
2012		திருமதி. கு.நிரேஸ்குமார்	செல்வி. தி.லக்ஸனா	செல்வி. து.றெஜினா	செல்வி. ச.சோபிதா	
2013		திருமதி. கு.நிரேஸ்குமார்	செல்வி. க.சுபிற்றிகா	செல்வி. பா.பிரியங்கா	செல்வன். போஜீவகாந்	
2013	வணிக மன்றம்	திரு. செரவிச்சந்திரன்	செல்வி. செ.சஞ்சிதா	செல்வி. தெ.துளசி	செல்வி. பா.நிரோஜா	மன்றங்கள் நடத்தியமை. வணிகப் போட்டிகளில் வலய மட்டத்தில் பங்குபற்றியமை. சிற்றுண்டிச் சாலை நடத்தியமை.

2011	சமூக விஞ்ஞான மன்றம்	திருமதி. ஸ்ரீபத்மதாசன்	செல்வி. அ.நளாயினி	செல்வி. த.உ.சாளினி	செல்வன். கவிரேதயன்	சமூக விஞ்ஞான மன்றம் அறிவினை மேம் படுத்து வதிலும் சமூகத் தொடர்பை விருத்தி செய்வதிலும் அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. சமூக விஞ்ஞானப் போட்டிகளை நடாத்தி வருவதுடன் கோட்ட வலய மட்டத்திலும் பங்கு பற்றி வெற்றி பெற்றமை.
2012		திருமதி. ஸ்ரீபத்மதாசன்	செல்வி. த.அஜித்தா	செல்வன். சி.பிரதீபன்	செல்வி. யோஉதயதரணி	
2013		திருமதி கு.சிவகுமாரன்	செல்வி. பா.சதுர்சனா	செல்வி யேஅரிக்சுதா	செல்வி. உ.சர்மிலா	
2013	மனைப் பொருளியல் மன்றம்	திருமதி சோ.திருஞான மூர்த்தி	செல்வி. மு.விதுர்சனா	செல்வி. யோஉதயதரணி	செல்வி. உ.சர்மிலா	கண்காட்சிகள் நடாத்தப் பட்டமை. கோட்ட, வலய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்றமை.
2011	ஆங்கில மன்றம்	செல்வி. ம.காத்யாயினி	செல்வி. நி.கிருஷ்ண தயாளினி	செல்வி. ச.டர்சிகா	செல்வி. சி.தனுசிகா	ஆங்கிலப் போட்டிகளுக்கு மாணவர்களை தயார்படுத்தியமை கோட்ட மட்டத்தில் 2012ல் தரம் 6மாணவி உறுப்பெறுதலில் 2ம் இடம் பெற்றமை கோட்ட மட்டத்தில் 2013ல் உரையாடலில் 6, 7 மாணவர்கள் 2ம் 3ம் இடங்களைப் பெற்றமை. வியாழக்கிழமை களில் ஆங்கிலமொழிமூல ஒன்றுகூடலை ஏற்பாடு செய்தல் ஆங்கில மன்றம்.
2012		திரு. ந.மயூரன்	செல்வி இ.சஞ்சிகா	செல்வி ஞா.நவதீபா	செல்வி. ர.கல்பனா	
2013		திருமதி. வேசெல்வசீபன்	செல்வி. ர.கஜீனா	செல்வன். சுபராஜன்	செல்வன். சோஜனக்ஸன்	

2013	சுகாதாரக் கழகம்	திருமதி நா.சரவணபவன்	செல்வன். பா.விஜிந்தன்	செல்வி. சி.டெனிக்கா	செல்வி. உ.சர்மிலா	டெங்கு ஒழிப்புச் சிரமதானம் செய்யப்பட்டது போசாக்கு வில்லைகள் வழங்கப்பட்டன. மருத்துவபீட மாணவர்களால், மாணவர்களுக்கு செயற்திட்டம் நடைபெற்றது. பாடசாலைச் சுகாதாரப் பரிசோதனைச் செயற்பாடுகளை நடத்தியமை. புகைத்தல் ஒழிப்பு வாரம் கொண்டாடப் பட்டமை. மது ஒழித்தல் வேலை நடைபெற்றது.
2011	சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவு.	திரு. இ.சர்வேஸ்வரன்	செல்வன். ஜே.ஜெசிந்தன்	செல்வன். கி.கிருசன்	செல்வன் யோ.மதி சாந்தன்	பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் தனது சேவை யைச் செய்து வருகிறது. குறிப்பாக பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டிகளின் போது முதலு தவிச் சேவை யைத் திறம்படச் செய்து வருகிறது.
2013	Mother Sri Lanka.	திருமதி மே.சிவநாதன்	செல்வன். க.விதுசன்	செல்வன். பா.மனோஜ்	திருமதி. சுசிவகுமாரன்	வலய, மாகாண மட்டங்களில் செயற்திட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டி பரிசில்கள் பெற்றமை. பாடசாலைத் தோட்டம் பரா மரிக்கப்பட்டது.

2012 2013	சுற்றாடல் முன்னோடிக்கழகம்	திருமதி சோ.திருஞான மூர்த்தி. திருமதி. சு.சதீஸ்வரன்	செல்வன். ச.கௌசயன்	செல்வி . சா.பவிதா		மரம் நடுகை, சுற்றாடல் மேம்பாடு, பாடசாலைத் தோட்டம் பராமரிப்பு.
2011	சாரணியம்	திரு. இசர்வேஸ்வரன் திருமதி சு.சிவகுமாரன்.	செல்வன். சி.ஜீவிதன்	செல்வன். ச.கௌசயன்	செல்வன் உ.நிலக்சன்	எமது சாரணர் தர்பயில் 30 மாணவர்கள் சேவையாற்றி வருகின்றனர். சிரமதானமப்பணிகள் வருடாந்த வேலைவாரம் ஆலய உற்சவங்கள் மெய்வல்லுனர் நிகழ்வுகளிலும் வருடாவருடம் சேவையாற்றி வருகின்றனர். பாசறைகளில் பங்குபற்றியுள்ளனர். பேடன்பவுலின் நினைவுதின விழாவில் பங்குபற்றி நிகழ்ச்சிகளை வழங்கிச் சிறப்பித்துள்ளனர்
2012		திரு. இசர்வேஸ்வரன் திருமதி சு.சிவகுமாரன்.	செல்வி. து.றெஜினா		செல்வன். கிதுவாரகன்	
2013	குருளைச் சாரணியம்	திரு. இசர்வேஸ்வரன் திருமதி சு.சிவகுமாரன் திருமதி பி.அருட்சந்திரன்	செல்வன். ச.கௌசயன்	செல்வி . ந.கஜலக்சி	செல்வன். மயிறுவராஜ்	
2012	இயற்கை வலுவூட்டல் கழகம்.	திருமதி சு. சிவகுமாரன்	செல்வன். பா.விஜிந்தன்	செல்வி. உ.சர்மிலா	செல்வன். இ.சுஜிபன்	பறவைகள் அவதானிப்பு பற்றிய களப்பயணம் மேற்கொண்டமை. கழல் தினம் கொண்டாடப் பட்டது. போட்டிகள் நடாத்தப் பட்டமை. வதிவிட கருத்தரங்கு மேற்கெர்ளளப் பட்டமை.
2013		திருமதி சு.சிவகுமாரன்.	செல்வன். மயிறுவராஜ்	செல்வன். ச.கௌசயன்	செல்வன். உ.நிலக்சன்	
2011 2012 2013	பாண்ட் அணி.	திருமதி.ஆ.குகபரன் திருமதி.வே.செல்வசசீபன்				எமது கலலூரியின் பாண்ட் அணி சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. இவ் அணி பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின்போதும் பரிசளிப்புவிழாவின்போதும் விருந்தினர்களை வரவேற்று கௌரவித்தும் வருவதுடன் அயல் பாடசாலைகள் பொதுநிறுவனங்களின் நிகழ்வுகளிலும் பங்களிப்புசெய்து வருகின்றது.

ஆரம்பக்கல்வி மாணவர் மன்றம்

2011 -	பொறுப்பாசிரியர்கள்	-	திருமதி.சி.குலவீரசிங்கம்
			திருமதி.வி.மோகலிங்கம்
	தலைவர்	-	யோ.கனிஸ்ரன்
	செயலாளர்	-	கி.வைஸ்ணவி
2012 -	பொறுப்பாசிரியர்	-	திருமதி.வி.மோகலிங்கம்
	தலைவர்	-	சி.அபிவர்மன்
	செயலாளர்	-	ச.சாளினி
2013 -	பொறுப்பாசிரியர்	-	திருமதி.வி.மோகலிங்கம்
	தலைவர்	-	த.கம்சவர்த்தனன்
	செயலாளர்	-	ஸ்ரீ.கவிதா

நூலக சேவை

பொறுப்பாசிரியர் - திருமதி.சு.ரவீந்திரநாதன்

எமது பாடாலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பயன்மிக்க அரிய நூல்கள் பேணப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் நூலக பாட வேளைகளில் நூலகத்திற்கு சென்று பயன்பெற்று வருகின்றார்கள். நூலகவாரம், தேசிய வாசிப்பு மாதம் போன்ற நிகழ்வுகளும் சிறப்பான முறையில் கொண்டாடப்படுகின்றது. மேற்படி நிகழ்வுகளையொட்டி நடாத்தப்படுகின்ற போட்டிகள் எமது வித்தியாலய மாணவர்கள் பங்குபற்றி பரிசில்களை பெற்று வருகின்றார்கள்.

நன்றி நவில்கின்றேன்...

எமது பாடசாலையின் வருடாந்தப் பரிசில் நாளில் எமது அன்பான அழைப்பையேற்று முதன்மை விருந்தினராக வருகை தந்து சிறப்பித்திருக்கின்ற கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் உயர்திரு வி.பொ.பாலசிங்கம் அவர்களுக்கும், மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்த திருமதி.அன்னலஷ்மி பாலசிங்கம் அவர்களுக்கும் எமது அன்பு நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பரிசில்நாள் வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்த சர்வதேச லயன்ஸ் கழக உபமாவட்ட ஆளுநர் டாக்டர் லயன் வை.தியாகராஜா (ச.நீ) அவர்களுக்கும், நல்லூர்க் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு.அ.அகிலதாஸ் அவர்களுக்கும் எமது பாடசாலை சமூகத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய நாளில் எமக்கு ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கின்ற குருமணிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்னுடைய முப்பத்தியாறு ஆண்டுகள் கல்விப்பணியில் யாழ் கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராக, அதிபராக இருபத்திமூன்று வருட காலப்பகுதிகள் நான் சேவையாற்றியிருக்கின்றேன். இப்பரிசுத்தின நாள் என்னுடைய சேவையில் இறுதிப் பரிசுத்தினமாகும். அந்த வகையிலே இத்தினத்திலே என்னுடன் எனது நிர்வாகக் கருமங்களுக்கு ஒத்தாசை புரிந்த பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் அனைவரது சேவையையும் நன்றியுணர்வுடன் நான் நினைவுகூருகிறேன். தற்போது எனக்கு பக்கபலமாக இருந்து பாடசாலையின் முகாமைத்துவத்திற்கும், கல்வி நிர்வாகத்திற்கும், கல்வி அபிவிருத்திக்கும் பங்காற்றி வரும் பிரதி அதிபர் இ.சர்வேஸ்வரன் அவர்களுக்கும் பகுதித் தலைவர்கள் திருமதி.கௌ.மாணிக்கராஜா, திருமதி.ஸ்.ஸ்ரீபத்மதாசன், திருமதி.ரே.சிவசோதி அவர்களுக்கும் எமது பாடசாலையின் வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்து செயலாற்றி வரும் ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமக்கு வழிகாட்டி, ஆலோசனை வழங்கி, எமது பாடசாலையின் நிர்வாகக் கருமங்களை, கல்விச் செயற்பாடுகளை சிறந்த முறையில் முன்னெடுக்க ஒத்தாசை புரிகின்ற எமது யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.S.உதயகுமார் அவர்களுக்கும், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் திரு.கோ.வரதராஜமூர்த்தி அவர்களுக்கும், திரு.சி.மாணிக்கராஜா அவர்களுக்கும், திரு.பொ.அருணகிரிநாதன் அவர்களுக்கும், திரு.S.ரவீந்திரநாதன் அவர்களுக்கும் யாழ் கல்விவலய ஆசிரிய நிலைய முகாமையாளர் திரு.ஞா.இரத்தினசிங்கம் அவர்களுக்கும், நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.அ.அகிலதாஸ் அவர்களுக்கும், யாழ் கல்வித் திணைக்கள பொறியியலாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், தொழில்நுட்ப அலுவலர்கள், யாழ் வலயக் கல்வித்திணைக்களத்தின் உதவிக்

கல்விப்பணிப்பாளர்கள், சேவைக்கால ஆலோசகர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவரக்கும் எமது பாடசாலை சமூகத்தின் சார்பில் நன்றிகயைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

